All Rights Reserved

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதிப் பரீட்சை – 2011 ஜூலை

## (58) வரியியல்

Taxation

16-07-2011
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை : 05

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

  *(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக*

  *(2) **விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

  *(3) கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

  *(4) சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும் முன்வைக்குக. உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடுக.*

  *(5) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

**01.** **வ/வு ரணமுத்து (தனியார்) கம்பனி,** கொழும்பில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட வதிவிடக் கம்பனியாகும். 10 பெப்ரவரி 2006 இல் உருவாக்கப்பட்ட இந்தக் கம்பனி, ஆபரணங் களை உற்பத்தி செய்து உள்நாட்டவருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் விற்பனை செய்யும் வியாபாரத்தை 4 மே 2006 இல் தொடங்கியது. கம்பனி “ரண்முத்து” என்ற வியாபார நாமத்தை வரி மதிப்பாண்டு 2006/2007 இல் கொள்வனவு செய்தது. கம்பனிக்கு என கொழும்புக் கோட்டையில் ஒன்றும் கொள்ளுப்பிட்டியில் இன்னொன்றுமாக இரு காட்சி நிலையங்கள் உள்ளன. கொள்ளுப்பிட்டி காட்சி நிலையம் 25 ஜூன் 2009 இல் திறக்கப்பட்டது.

பின்வரும் விபரங்கள் வரி மதிப்பாண்டு 2009/10 இற்கு உரியவையாகும்.

நடப்பாண்டில் கம்பனி ரூ.12 வீதப்படி 100,000 சாதாரண பங்குகளை வழங்கியது. பங்கு வழங்கலுக்கான முத்திரை வரி வருமானக் கூற்றில் தாகக்ல் செய்யப்பட்டது. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி, பங்கொன்றினை ரூ.15 ஆக மதிப்பீடு செய்துள்ளார்.

31 மார்ச் 2010 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின்போது சகல செலவுகளையும் தாக்கல் செய்து சகல வருமானங்களையும் கணக்கிற் கொண்ட பின்னர் பெற்ற வருமான வரிக்கு முந்திய இலாபம் ரூ.13,450,000 ஆகும்.

**நிதிக்கூற்றுக்களுக்காக குறிப்புகள் :**

**குறிப்பு 1**

**ஏனைய வருமானங்கள்**

| | ரூ. |
|---|---:|
| திறைசேரி உண்டியல்களிலிருந்து பெற்ற வட்டி | 270,000 |
| நிலையான வைப்புகளின் மீதான வட்டி | 250,000 |
| தளபாட விற்பனையிலிருந்து பெற்ற இலாபம் | 2,000 |
| பங்கிலாப வருமானம் | 500,000 |

## குறிப்பு 2

**வருமானவரிக் கணக்கின் தொகுப்பு**

| | ரூ. |
|---|---:|
| 2009 ஏப்ரல் 01 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய வருமான வரி | 1,230,000 |
| ஆண்டிற்கான ஏற்பாடு | 4,000,000 |
| சுய மதிப்பீட்டின் பேரில் செலுத்திய கொடுப்பனவு 2008/2009 | (1,230,000) |
| சுய மதிப்பீட்டின் பேரில் செலுத்திய கொடுப்பனவு 2009/2010 | (3,560,000) |
| வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி | (25,000) |
| 2010 மார்ச் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய மீதி வருமான வரி | 415,000 |

## குறிப்பு 3

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**கிரயம்**

| விபரங்கள் | 01.04.2009 ஆம் திகதி மீதி ரூ. | சேர்ப்பனவு ரூ. | விற்பனை ரூ. | 31.03.2010 ஆம் திகதி மீதி ரூ. |
|---|---:|---:|---:|---:|
| காணி | 5,000,000 | - | - | 5,000,000 |
| கட்டிடம் | 2,100,000 | - | - | 2,100,000 |
| வியாபார நாமம் | 2,000,000 | - | - | 2,000,000 |
| மின்பிறப்பாக்கி | 400,000 | 250,000 | - | 650,000 |
| மோட்டார் வாகனங்கள் | 6,500,000 | - | - | 6,500,000 |
| அலுவலக உபகரணங்கள் | 900,000 | 200,000 | - | 1,100,000 |
| இரத்தினக்கல் வெட்டும் இயந்திரம் | 450,000 | | - | 450,000 |
| குளிரூட்டி | 650,000 | 240,000 | - | 890,000 |
| தளபாடம் | 340,000 | 120,000 | 35,000 | 425,000 |
| கணினிகள் | 200,000 | 120,000 | 100,000 | 220,000 |
| கணினி மென்பொருள் | 150,000 | - | - | 150,000 |
| **மொத்தம்** | **18,690,000** | **930,000** | **135,000** | **19,485,000** |

**பெறுமானத் தேய்வு**

| விபரங்கள் | 01.04.2009 ஆம் திகதி மீதி ரூ. | ஆண்டிற்கான அறவீடு ரூ. | விற்பனை ரூ. | 31.03.2010 ஆம் திகதி மீதி ரூ. |
|---|---:|---:|---:|---:|
| காணி | - | - | - | - |
| கட்டிடம் | 210,000 | 105,000 | - | 315,000 |
| வியாபார நாமம் | 300,000 | 100,000 | - | 400,000 |
| மின்பிறப்பாக்கி | 400,000 | 250,000 | - | 650,000 |
| மோட்டார் வாகனங்கள் | 1,900,000 | 650,000 | - | 2,550,000 |
| அலுவலக உபகரணங்கள் | 108,000 | 36,000 | - | 144,000 |
| இரத்தினக்கல் வெட்டும் இயந்திரம் | 135,000 | 45,000 | - | 180,000 |
| குளிரூட்டி | 175,000 | 65,000 | - | 240,000 |
| தளபாடம் | 102,000 | 34,000 | 7,000 | 129,000 |
| கணினிகள் | 120,000 | 40,000 | 100,000 | 60,000 |
| கணினி மென்பொருள் | 150,000 | - | - | 150,000 |
| **மொத்தம்** | **3,600,000** | **1,325,000** | **107,000** | **4,818,000** |

(1) கட்டிடம், ஏப்ரல் 2007 இல் கட்டி முடிக்கப்பட்டது.

(2) கம்பனிக்குச் சொந்தமான மோட்டார் பேரூந்து ஒன்றும் (Coach) மோட்டார் கார் ஒன்றும் இருந்தன. 2007/2008 இல் ரூ.3,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இப்பேரூந்து பணியாளர்களை வீட்டிலிருந்து வேலைத்தளத்திற்கும் வேலைத்தளத்திலிருந்து வீட்டிற்கும் அழைத்து வர உபயோகிக்கப்பட்டது. 2006/2007 இல் ரூ.3,500,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் காரானது, முகாமைப் பணிப்பாளரது சொந்த மற்றும் காரியாலய உபயோகத்திற்கும் பாவிக்கப்பட்டது. இவரது உ.வ.செ. (PAYE Tax) கணிப்பின்போது கார்ப் பாவனை காசற்ற நன்மையாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

(3) மாதாந்தம் ரூ.15,000 சம்பளம் பெறும் அலுவலக உதவியாளர் ஒருவரது பாவனையின் பொருட்டு, மோட்டார் சைக்கிள் ஒன்று தொழிற்பாட்டுக் குத்தகைக்கு (operating lease) பெறப்பட்டது. குத்தகைக் காலம் 01 நவம்பர் 2008 இல் ஆரம்பிக்கும் நான்கு (4) வருட காலத்தைக் கொண்டதாகும். மாதாந்தக் குத்தகைக் கட்டணம் ரூ.5,000 ஆகும். செலுத்தப்பட்ட குத்தகைக் கட்டணம் இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

(4) 2007/2008 இல் வாங்கப்பட்ட மேசையொன்று 01 டிசம்பர் 2009 இல் விற்கப்பட்டு, புதியதொரு மேசை 15 மார்ச் 2010 அன்று ரூ.28,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(5) வரிமதிப்பாண்டு 2006/2007 இல் கொள்வனவு செய்யப்பட்ட கணினி, கணினி மென் பொருட்கள் யாவும் உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டவையாகும். மின்னல் காரணமாக பாதிப்புக்குள்ளான கணினியொன்று அப்புறப்படுத்தப்பட்டு அதற்காக புதிய கணினியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(6) ஆதனம், பொறி, இயந்திரம், உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து உருப்படிகளும் கம்பனி தொடங்கப்பட்ட வரிமதிப்பாண்டு 2006/2007 இல் கொள்வனவு செய்யப்பட்டவைகளாகும்.

**குறிப்பு 4**

கம்பனி ரூ.5,000,000 இனை பங்கிலாபமாகப் பிரகடனம் செய்தது. இதில் ரூ.500,000 கம்பனிக்குக் கிடைத்த பங்கிலாபத்தில் இருந்து பகிரப்பட்டதாகும்.

**குறிப்பு 5**

நடப்பாண்டிற்கான கம்பனிப் புரள்வின் விபரங்கள் வருமாறு

| **புரள்வு** | **ரூ.** |
|---|---:|
| உள்நாட்டு விற்பனை – உள்நாட்டுக் காசுக்கு | 125,340,000 |
| உள்நாட்டு விற்பனை – வெளிநாட்டுக் காசுக்கு | 25,250,000 |
| **மொத்தம்** | **150,590,000** |

நடப்பாண்டில் ஏற்றுமதிகள் எதுவும் இருக்கவில்லை.

**குறிப்பு 6**

2010 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக தேறிய இலாபத்தைக் கணக்கிடும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட சில செலவுகளினதும் வரவு செய்த வருமானங்களினதும் விபரங்கள் வருமாறு

(01) விளம்பரச் செலவுகளின் விபரம் :

| | ரூ. |
|---|---|
| புதிய காட்சியறை நிலையமொன்றைப் பெறுவதற்கு செய்யப்பட்ட பத்திரிகை விளம்பரச் செலவு | 12,000 |
| "ரண்முத்து" உற்பத்திப் பொருட்களை இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்கு ஏற்பட்ட செலவு | 120,000 |
| புதிய பெயர்ப்பலகை பொருட்டு ஏற்பட்ட செலவு | 65,000 |

(02) முகாமைப் பணிப்பாளரால் வெளிநாட்டுப் பிரயாணச் செலவாக செய்த செலவு ரூ.525,000, ஒரு புதிய வைரம் வெட்டும் இயந்திரத்தைப் பரீட்சிப்பது தொடர்பானது.

(03) சந்தை ஆராய்ச்சி செலவாக நடப்பாண்டில் ரூ.3,000,000 செலவழிக்கப்பட்டது.

(04) நடப்பாண்டில் விருந்தோம்பல் செலவாக ரூ.57,000 செலவானது.

(05) புதிய குத்தகை ஒப்பந்தமொன்றிற்குச் சட்டச் செலவாக ஏற்பட்ட கிரயம் ரூ.14,000 மேலும் அறவிடமுடியாக் கடனொன்றை அறவிட எடுத்த சட்ட நடவடிக்கைச் செலவு ரூ.12,000 ஆகும்.

(06) குத்தகை ஒப்பந்தத்திற்காகச் செலுத்திய முத்திரை வரி ரூ.30,000 ஆகும். இதற்கான பற்றுச் சீட்டுகளில் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி ரூ.8,000 ஆகும்.

(07) 01 மே 2009 இலிருந்து 31 மார்ச் 2010 வரையிலான காலப்பகுதிக்குச் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) ரூ.3,600,000

(08) அறவிடமுடியாக் கடன் ஒதுக்கற் கணக்கின் விபரங்கள் பின்வருமாறு

| | ரூ. |
|---|---|
| 01 ஏப்ரல் 2009 இல் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 240,000 |
| இலாபநட்டக் கணக்கு (குறிப்பிடப்பட்டவை) | 40,000 |
| இலாபநட்டக் கணக்கு (பொது) | 100,000 |
| முன்னைய வருடத்தில் செய்யப்பட்ட குறிப்பிட்ட ஏற்பாட்டின் எதிர்ப் பதிவு | (20,000) |
| 31 மார்ச் 2010 இல் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 360,000 |

வியாபாரக் கடன் ரூ.72,000 உம் வியாபாரம்சாரா கடன் ரூ.12,000 உம் அறவிடமுடியாக் கடனாக இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டன.

(09) மோட்டார் வாகன திருத்த, பராமரிப்புச் செலவுகள் பின்வருமாறு,

| | **முகாமைப் பணிப்பாளரது மோட்டார் கார் ரூ.** | **மோட்டார் பேரூந்து ரூ.** |
|---|---|---|
| எரிபொருள் | 180,000 | 125,000 |
| திருத்த, பராமரிப்பு செலவுகள் | 134,000 | 195,000 |
| **மொத்தம்** | **314,000** | **320,000** |

(10) அரச புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள பிள்ளைகள் விடுதிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பால் உணவுப் பொருட்களின் பெறுமதி ரூ.35,000 “நமக்காக நாம்” நிதிக்குச் செலுத்தப்பட்ட காசு அன்பளிப்பு ரூ.230,000

(11) பணிக்கொடை சட்டத்திற்கமைய கம்பனியானது நிதிக்கூற்றுகளில் பணிக்கொடை ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. எனினும் நடப்பாண்டில் பணியிலிருந்து விலகிய பணியாளர் ஒருவருக்கு ரூ.325,000 வை கம்பனி பணிக்கொடையாக வழங்கியது.

மேற்கூறிய விபரங்களிலிருந்து,

வ/வு ரண்முத்து (தனி) கம்பனியின் வரிமதிப்பாண்டு 2009/10 தொடர்பாக பின்வருவனவற்றைக் கணிக்குக.

(a) ஒவ்வொரு மூலத்தில் இருந்தான சட்ட நியதி வருமானம்
(b) மொத்த சட்ட நியதி வருமானம்
(c) வரிமதிப்பு வருமானம்
(d) வரிவிதி வருமானம்
(e) செலுத்தப்பட வேண்டிய மொத்த வருமான வரி
(f) செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய வருமான வரி
(g) வரிவிலக்குள்ள வருமானம் (ஏதேனும் இருப்பின்)

(பெறுமதிசேர் வரி, கருதப்படும் பங்கிலாப வரி (deemed dividend tax) என்பவற்றில் ஏற்படும் விளைவுகளைப் புறக்கணிக்குக). (35 புள்ளிகள்)

**02.** **வதிவுள்ள தனியாளான** வைத்தியக் கலாநிதி **திரு.டோல்டன்** 60 வயதினை அடையும், 2004/2005 ஆண்டில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற வைத்தியராவார். அவிசாவளையில் உள்ள தனது வீட்டிலிருந்து அவர் பிரத்தியேக வைத்திய சேவையைச் செய்து வருகிறார்.

வுரி மதிப்பாண்டு 2009/10 இற்கான அவரது வருமான விபரங்கள் பின்வருமாறு:

(1) இலங்கை அரசிடமிருந்து பெற்ற மாதாந்த ஓய்வூதியப் பணம் ரூ..42,000.

(2) அவரது பிரத்தியேக வைத்திய சேவையின் 2010 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு பின்வருமாறு:

| **வருமானம்** | **ரூ.** | **செலவு** | **ரூ.** |
|---|---|---|---|
| பெற்ற சேவைக் கட்டணம் | 4,230,000 | மருந்துப் பொருள் கொள்வனவு | 650,000 |
| மருந்துப் பொருள் விற்பனை | 1,459,452 | சம்பளம் | 960,000 |
| | | மின்சாரம் | 180,000 |
| | | தொலைபேசி | 75,000 |
| | | கணினிக் கொள்வனவு | 80,000 |
| | | வைத்திய சபைக்கு வருடாந்தச் சந்தா | 40,000 |
| | | வெளிநாட்டுப் பயணம் | 130,000 |
| | | நீர் | 63,000 |
| | | சிற்றுபகரணங்கள் | 189,000 |
| | | இலாபம் | 3,322,452 |
| | **5,689,452** | | **5,689,452** |

மேலதிக தகவல்கள் பின்வருமாறு:

(i) மருந்துப்பொருள் இருப்பு பின்வருமாறு:
2009 ஏப்ரல் 01 ஆம் திகதி ரூ.120,000
2010 மார்ச் 31 ஆம் திகதி ரூ.135,000

(ii) வெளிநாட்டுப் பிரயாணம் ஒரு பயிற்சி நிகழ்ச்சிக்காக (வைத்திய சம்பந்தப்பட்ட) செய்யப்பட்டது.

(iii) நடப்பாண்டில் கழித்தெறியப்பட்ட சிற்றுபகரணங்களுக்காகவே புதியவை கொள்வனவு செய்யப்பட்டன.

(iv) தொலைபேசி, நீர், மின்சாரம் ஆகியவற்றிற்கு உண்டான செலவுகளில் 50% ஆனவை வைத்தியர் டோல்டனின் பிரத்தியேக பாவனைக்காகும்.

(3) வைத்தியர் **டோல்டன்,** அவரது சகோதரர் ஒஸ்டினுக்குச் சொந்தமான வீடொன்றில் வசிக்கிறார். ரூ.80,000 வருடாந்த மதிப்புள்ள இவ்வீட்டிற்கு, பெயரளவு வாடகையாக மாதமொன்றுக்கு ரூ.3,000 செலுத்தினார். மேலும் 2004/2005 ஆண்டு கட்டப்பட்ட தனது சொந்த வீடொன்றை வைத்தியர் டோல்டன் மாதாந்தம் ரூ.10,000 இற்கு வாடகைக்கு விட்டிருந்தார். இந்த வீட்டின் வருடாந்த வாடகை மதிப்பு (Rental value) ரூ.72,000 ஆகும். செலுத்தப்பட்ட சோலை ரூ.12,000 ஆகும்.

(4) தேசிய சேமிப்ப வங்கியில் நிலையான வைப்பு ரூ.2,000,000 இற்கு ஆண்டிற்கான மொத்த வட்டியாக ரூ.280,000 அவருக்குக் கிடைத்தது. திறைசேரி உண்டியலுக்கு வட்டியாகவும் ரூ.200,000 கிடைத்தது.

(5) 1998 ஆம் ஆண்டில் ரூ.1,500,000 இற்கு வாங்கிய தனது சொந்த மோட்டார் காரை ரூ.1,800,000 விற்று அப்பணத்தினைக் கொண்டு ரூ.2,200,000 பெறுமதியான புதியதொரு காரினை அவர் நடப்பாண்டில் வாங்கினார்.

(6) அவருக்குக் கிடைத்த பங்கிலாபங்கள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| பங்கிலாபம் - வரிவிலக்குப் பெற்ற இலாபங்களில் இருந்து பகிரப்பட்டவை | 55,000 |
| பங்கிலாபம் - 10% நிறுத்தி வைத்தல் வரிக்கு உட்பட கம்பனியிடமிருந்து பெறப்பட்டவை. | 54,000 |

(7) **வைத்தியர் டோல்டன்,** இன்னுமொரு வீடொன்றைக் கட்டுவதற்கு ரூ.2,000,000 இனையும் தனது வாடகைக்கு விட்டுள்ள வீட்டினை அழகுபடுத்தும் தளபாடங்களுக்காக ரூ.354,000 இனையும் அவருடைய வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றார். இக்கடனுக்காக அவர் நடப்பாண்டில் செலுத்திய கொடுப்பனவுகள் பின்வருமாறு:

| | **வீட்டைக் கட்டுவதற்குப் பெறப்பட்ட கடன் ரூ.** | **வீட்டின் தளபாடங்களுக்குப் பெறப்பட்ட கடன் ரூ.** |
|---|---|---|
| வட்டிக் கொடுப்பனவுகள் | 120,000 | 67,000 |
| கடன் முதல் மீள் கொடுப்பனவுகள் | 140,000 | 98,000 |

(8) நீதிமன்ற ஆணையொன்றின்படி நடப்பாண்டில் அவரது முன்னாள் மனைவிக்கு மாதாந்தம் ரூ.15,000 செலுத்தினார்.

(9) வைத்தியர் டோல்டன் வருடாந்த வைத்தியக் காப்புறுதி கட்டணமாக ரூ.55,000 இனைச் செலுத்தினார்.

(10) கிராமத்திலுள்ள வணக்கஸ்தலம் ஒன்றுக்கு காசாக ரூ.10,000 உம் அனுமதிக்கப்பட்ட அறக்கொடை ஒன்றிற்கு பொருட்களாக ரூ.24,000 உம் செலுத்தினார்.

மேற்கூறிய தகவல்களிலிருந்து

**வைத்தியர் டோல்டனின் வரிமதிப்பாண்டு 2009/10 தொடர்பாக கீழ்வருவனவற்றைக் கணிக்குக.**

(a) ஒவ்வொரு வருமான மூலத்தில் இருந்தும் சட்ட நியதி வருமானம்

(b) மொத்த சட்ட நியதி வருமானம்

(c) வரிமதிப்பு வருமானம்

(d) வரிவிதி வருமானம்

(e) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(f) செலுத்த வேண்டிய எஞ்சிய வருமான வரி

(g) வரிவிலக்கு வருமானம் (ஏதேனும் இருப்பின்) (30 புள்ளிகள்)

**03.** **வ/வு நோ கொஸ்ட் (தனி) கம்பனி,** வரி ஆலோசனை வழங்கும் நிறுவனமாகும். 2009 செப்ரம்பர் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

*தேவைப்படுமிடத்து எல்லா தொகைகளும் பெ.சே.வரியை உள்ளடக்கியவையாகும்*

| | **ரூ.** |
|---|---|
| காலாண்டில் உள்நாட்டில் பெறப்பட்ட ஆலோசனைக் கட்டணம் | 3,024,000 |
| வெளிநாட்டு ஆலோசனைக் கட்டணம் (அமெரிக்க டொலர்களில்) (இலங்கைக்கு வெளியே நுகரப்பட்ட சேவை) | 2,000,000 |
| அலுவலகப் பராமரிப்பிற்காக சேவை வழங்கும் நிறுவனத்திற்கு (பெ.சே.வரி பதிவு செய்யப்பட்டது) செலுத்தப்பட்ட கட்டணம் | 448,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,000,000 |
| இணையம், இலத்திரனியல் கடிதக் கட்டணம் | 291,200 |
| மின்சாரம் | 120,000 |
| பெ.சே.வரி பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கருத்தரங்குக் கட்டணம் | 806,400 |
| சென்ற காலாண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட உள்ளீர்க்கப்படாத மிகை உள்ளீட்டு பெறுமதிசேர் வரி (Unabsorbed input VAT) | 125,000 |
| ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் செலுத்தப்பட்ட பெ.சே.வரி | 10,000 |

**பின்வருமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்**

(a) 2009 செப்ரம்பர் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கு செலுத்த வேண்டிய பெ.சே.வரியினை கணிக்குக.

(b) செலுத்தப்பட்ட ஏதேனும் பெ.சே.வரி, அடுத்த காலாண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட முடியுமா? ஆப்படியாயின் அத்தொகையைக் குறிப்பிடுக.

(c) மேற்குறித்த காலாண்டிற்கான பெறுமதிசேர் வரித் திரட்டினை எப்போது சமர்ப்பிக்க வேண்டும்? (15 புள்ளிகள்)

**04.** (a) செல்லுபடியாகக்கூடிய வருமானவரி மேன்முறையீட்டிற்கு இருக்க வேண்டிய குணவியல்புகளைக் கூறுக. (05 புள்ளிகள்)

(b) காலதாமதமான மேன்முறையீடொன்றை உள்நாட்டு இறைவரி அதிபதி ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களைக் கூறுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**05.** (a) உழைக்கும்போதே செலுத்தும் திட்டத்தின் (PAYE) கீழ் வேலை கொள்வோரின் பொறுப்புக்கள்/ கடமைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(b) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் கூறியவாறு பின்வருவனவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(i) குறித்தொதுக்கப்பட்ட நபர் (Specified person)

(ii) பிள்ளை (child) (07 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

– o0o –